Registered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

அன்டன்
அலுமினியம் லூவர்ஸ்,
ஸ்லொட்டட்
ஆங்கிள் அயன்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 ஆனி 17 ஐ: அவ் 7 (1—7—71) வியாழக்கிழமை இதழ் 139

## அண்டவெளியில் நீண்டநாள் சஞ்சரித்த

# ரஷ்ய விண்வெளிவீரர் மூவரும் இறந்து கிடந்தார்கள்!

## நயினாதீவு யாத்திரிகர் பஸ் விபத்தில் சிக்கியது

யாழ்ப்பாணம் வியாழ. புங்குடுதீவில் நேற்றுக் காலை நடந்த பஸ் விபத்தில் பஸ் ஊழியர் உட்பட ... பிரயாணிகள் ... காயமடைந்தனர். பஸ்கள் இரண்டும் பலத்த சேதமடைந்தன. நயினாதீவிலிருந்து திரும்பிய யாத்திரிகர்கள் இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர்.

இவ் விபத்தில் படுகாயமடைந்த வேலணையைச் சேர்ந்த சின்னத்தம்பி விக்னேஸ்வரன், கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா ஆகியோர் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

எதிரெதிரே வந்த இரு பஸ் வண்டிகள் மோதிக் கொண்டதால் இவ் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்ட சமயம் பிரயாணிகள் பலத்த சத்தமிட்டதாக பஸ் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்விபத்தில் சிறுகாயமடைந்த பிரயாணிகள் உடனடியாக புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு 5 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்திற்கு யாழ்ப்பாண டிப்போ அதிகாரிகள் உடனடியாகச் சென்றனர்.

## மாவை ஆதீனகர்த்தாக்கள் மீது வழக்கு?

யாழ்ப்பாணம், வியா. மாவை ஆலயத்தில் உற்சவம், அபிஷேகம், பூசை ஆகியன நடத்தாது கதவுகளைப் பூட்டி வைத்திருப்பது தொடர்பாக ஆலய ஆதீன கர்த்தாக்கள் மீது வழக்கு தொடரலாமா என்பது குறித்து பொலிசார் அட்டர்னி ஜெனரலிடம் ஆலோசனை கேட்டுள்ளனர்.

ஆலயக்கதவுகளைப் பூட்டி வைத்துக் கொண்டு அபிஷேகமோ பூசையோ உற்சவமோ நடாத்துவதற்கு புதியசட்டம் இடம் கொடுக்காதென்றும் அப்படிச் செய்யும் பட்சத்தில் ஆலயக்கதவுகளைத் திறந்துவிட வேண்டிய நிலைமை தங்களுக்கு ஏற்படுமென்று பொலிசார் தெரிவித்ததைத் தொடர்ந்தே விசேஷ அபிஷேகம் கூட நடைபெறவில்லை யென்று தெரிகிறது.

## உலகசாதனை நிகழ்த்தியவர்களின் பயங்கரமான சோக முடிவு!!

மாஸ்கோ, ஜூன் 30

### சோயுஸ்-11 என்ற விண்வெளிக் கலத்தில் பிரயாணம் செய்த சோவியத் வீரர்கள் மூவரும் இறந்துவிட்டார்கள்.

24 நாட்கள் விண்வெளியில் பிரயாணம் செய்து அரும் பெரும் சாதனைகளை நிகழ்த்திய இந்த வீரர்கள் மூவரும் பிரயாணம் செய்த கலம் பூமிக்குத் திரும்பியபின் விண்வெளி அதிகாரிகள் கலத்தின் கதவுகளைத் திறந்துபார்க்கையில் மூவரும் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். திட்டமிட்ட இடத்தில் சோயுஸ் கலம் வந்து இறங்கியது.

இவர்கள் தம் விண்வெளி பயணத்தின் திட்டத்தை முழு அளவுக்கு பூர்த்தி செய்தபின்னர் நேற்றிரவு இலங்கை நேரம்படி சுமார் 11-58 மணிக்கு சல்யூட் கலத்திலிருந்து சோயுஸ் கலத்துக்கு மாறினார்கள். அதன் பிறகு பூமிக்குத் திரும்புவதற்கான ரொக்கட் தீர்க்கப்பட்டது. அந்தக்கட்டத்தில் பூமியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. கலம் திட்டமிட்ட இடத்தில் இறங்கியது. கலத்தின் கதவுகளை மீட்புக்குழுவினர் திறந்த பொழுது மூவரும் பேச்சு மூச்சற்றுக் கிடந்தனர்.

### விண்வெளி ஆய்வுகூடத்தில் வாழ்ந்த முதலாவது மனிதர்

உலகின் முதலாவது நிரந்தரமான விண்வெளி ஆய்வு கூடத்தை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 19ந் திகதி சோவியத் யூனியன் விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இந்த ஆய்வு கூடத்தில் தங்கியிருந்து ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக சோயுஸ்-11 விண்கலத்தில் லெப்டினன்ட் கேணல் ஜியார்ஜி டொப்ரு வொல்ஸ்கி, பிளைட் என்ஜினியர் விளாடிஸ்லாவ் வொல்கோவ்; டெஸ்ட் என்ஜினியர் விக்டர் பட்ஸயேவ் ஆகிய மூவரும் ஜூன் மாதம் 6ந் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர்.

ஜூன் 7ந் திகதி இவ் வீரர்கள் மூவரும் சோயுஸ் கலத்திலிருந்து சல்யூட்-1 என்ற பெயருடைய விண்வெளி ஆய்வு கூடத்தினுள் மாறிய போது உலகின் முதலாவது விண்வெளி நிலையத்தில் முதலாவதாக வாழ்ந்த மனிதர்கள் என்ற பேற்றை அடைந்தனர்.

ஜூன் மாதம் 24ந் திகதியோடு இவர்கள் விண்வெளியில் வாழ்ந்து 18 நாட்கள் பூர்த்தியானதும் சோயுஸ் 9 வீரர்களுடைய விண்வெளியில் நீண்டகாலம் வாழ்ந்த சாதனையை முறியடித்தனர். ஜூன் மாதம் 20ந் திகதி வரை சல்யூட் விண்வெளி ஆய்வுகூடம் பூமியைச் சுற்றி 1000 தடவை வலம் வந்தது.

சோயுஸ் திட்டத்தில் இது இரண்டாவது பெரும் விபத்தாகும். இந்த மரணத்துக்கான காரணத்தை விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள். நீண்டகாலம் விண்வெளியில் தங்கியிருந்ததால் சீதோஷ்ண நிலை மாற்ற காரணமாக இவர்கள் இறந்திருக்கலாம் என்று பிரபல விஞ்ஞானி ஒருவர் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

இக்காரணத்தினால் தான் வீரர்கள் மூவரும் ஒரேநேரத்தில் இறந்திருந்தால் விண்வெளிப் பயணம்பற்றிய இப்போதைய கருத்துக்களை மாற்றப்பட வேண்டும் என்று என்று அவர் கூறியிருக்கிறார்.

வீரர்களின் மரணச் செய்தியை அறிவித்த மாஸ்கோ வானொலி செய்தியைத் தொடர்ந்து சோக இசையை மட்டும் ஒலிபரப்பியது.

மாஸ்கோவிலிருந்து இன்று காலை வெளியான செய்திப் பத்திரிகைகளில் விண்வெளி வீரர்களுடைய மரணச் செய்தி வெளியாகவில்லை. காலதாமதமாகச் செய்தி கிடைத்ததாலேயே இச்சோகச்செய்தி வெளியாகவில்லை யென்று 'டாஸ்' தெரிவித்தது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியொன்றில் 'அறிவைப் பெருக்குவதற்காக உதிர்த்த லட்சியவாதிகள் தியாகிகள்' என்று இறந்த விண்வெளி வீரர்களை வர்ணித்துள்ளார். உலக நாடுகள் பலவும் இறந்த வீரர்களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளன.

(6-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் திருவிழா வழமைபோல் நடைபெறும்

யாழ்ப்பாணம் வியாழன். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்முறையும் வழமைபோல் நடைபெறுமென்றும் ஊரடங்கு உத்தரவு காரணமாக முன்னர் செய்த ஏற்பாடுகளை நீக்கி வழமைபோல் திருவிழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் பொலிசார் வழமைபோல் தமது ஒத்துழைப்பையும் கடமைகளையும் செய்வார்களென்றும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

## மகாஜனசம்பத சுவிப் முடிவுகள்

கொழும்பு, வியா. நேற்று இழுக்கப்பட்ட மகாஜன சம்பத சுவிப் சீட்டிழுப்பு முடிவுகள்:

1-வது பரிசு
19 Y 000245 - 60,000

2-வது பரிசு
17 R 000219 - 60,000

3-வது பரிசு
13 R 000242 - 60,000

தலா 300 ரூபாய் ஆறுதல் பரிசு பெறும் 200 டிக்கட்டுகளில் முதல் 97 டிக்கட்டுகளும் வருமாறு:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03U000406 | 21L000421 | 03L000647 | 13G000832 | 05F000016 | 12H000168 |
| | | 21P000558 | 07C000266 | 11T000958 | 18V000849 |
| | | 04?000896 | 22F000743 | 22F000706 | 21D000460 |
| | | 15V000193 | 24G000843 | 09E000976 | 11M000841 |
| | | 05U000433 | 21K000763 | 10Q000691 | 21L000969 |
| | | 02S000431 | 14P000542 | 11O000240 | 14V000528 |
| | | 23Y000298 | 04W000032 | 09K000411 | 24U000328 |
| | | 03Z000687 | 20L000737 | 09E000154 | 18F000479 |
| | | 05F000552 | 05S000399 | 03E000412 | 02Q000799 |
| | | 12Z000082 | 16V000375 | 08V000241 | 11G000153 |
| | | 03Z000910 | 20W000643 | 04V000830 | 18Z000489 |
| | | 12D000238 | 05?000038 | 09S000939 | 13R000302 |
| | | 19T000667 | 07S000317 | 08V000850 | 16D000058 |
| | | 16K000983 | 23W000669 | 03V000180 | 15V000472 |
| | | 21S000378 | 13D000591 | | |
| | | 15Q000870 | 03D000459 | | |

6-ம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடபுத்தகம்

ஆறும் வகுப்புச் "சுகாதார போதினி" 6 ஆம் 7 ஆம் வகுப்புக்களுக்கென ஒரே நூலாக அமைக்கப்பெற்றிருந்த 'சுகாதாரபோதினி' இப்பொழுது கல்வி அமைச்சினால் 6-ம் வகுப்புக்கென அண்மையில் வெளியிடப்பட்ட சுகாதாரக் கல்விப் பாடத் திட்டத்திற்கேற்பத் திருத்தியமைக்கப் பெற்றுள்ளது. (ஏழாம் வகுப்பு நூல் அச்சில்) விலை ரூபா 1-50 தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். 3225

### விற்பனைக்கு

பாடப்புத்தகம்:

சுன்னாகம், டை இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக வெளியீடான ஜாதிக நவோதய (ஏழாந்தரப்) புலமைப் பரிசில் (Scholarship) பரீட்சைக்கேற்றவிதமாக அமைக்கப்பெற்ற "கணிதப் பயிற்சி" ஒவ்வொரு வினாப் பத்திரமும் பகுதி I, II என இரு பகுதிகளைக் கொண்ட எட்டு மாதிரிகை வினாப்பத்திரங்களைக் கொண்டது. விலை ரூபா 1-50. தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். 3224

### விற்பனைக்கு

பாடப்புத்தகம்:

"புவியியல்"- வி. கந்தவனம் B. A.- ஆறும், ஏழாம், எட்டாந்தரங்களுக்குரிய தனித்தனி நூல்கள் ஒவ்வொன்றும் புதிய பாடத்திட்டத்துக்கும் வழிகாட்டிக்கும் அமைய எழுதப்பெற்றவை பாடப் பாடுள் விளக்கத்துடன் தொடர்புபடுத்தப்பெற்ற தெளிவான, திருத்தமான விளக்கப்படங்கள் [50] தனி வண்ணத்திலும், பல வண்ணங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுக்கு துணை நூல்களாக "புவியியல் பட வேலைப் பயிற்சிகள்" VI, VII, VIII வெளியிடப்பெற்றுள்ளன. தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். 3226

சொந்தப் பாவிப்பிலுள்ள ருன்சிஸ்டர்ரேடியோ புதிய றலி சயிக்கிள், சிங்கர் மெஷின் ஆகியன விற்பனைக்குண்டு. விபரங்கட்கு வே. அப்பையா, இல. 9. மானிப்பாய் வீதி, ஒட்டுமடம். 3304

### தேவை

எமது பேக்கறியில் பாண், கேக் வேலைசெய்வதற்கு நம்பிக்கையுள்ள இருவர் தேவை. யூனியன் பேக்கறி மானிப்பாய் என்னும் விலாசத்துக்கு நேரில் வரவும். 3302

பார்கீப்பர்

அனுபவம் வாய்ந்த பார்கீப்பர் (BAR KEEPER) ஒருவர் தேவை. பிணைப்பணம் இரண்டாயிரம் கட்டவேண்டும் மற்றய விபரங்களுக்கு நேரில் மனோகரா தியேட்டர் மனேஜருடன் தொடர்பு கொள்ளவும் 3236

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M-B 8533

The Malcey Life Assurance Co Ltd having its office at No. 54 Jumma Mosque Lane, Jaffna வழக்காளி

எதிராக

க. பொன்னையா அல்லது அன்னம்மா நடுக்குறிச்சி சண்டிலிப்பாய்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M-B 8533-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னும் விபரிக்கப்படும் 1 கண்டுக் காணி 1971-ம் ஆண்டு ஆவணி மீ 15 உ (15-8-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 8841-ம் 19-10-66 தொடக்கம் 20-6-68 வரைக்கும் ரூபாய் 7742 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 515/50.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்கோயிற்பற்று சண்டிலிப்பாய் இறைபித்ததோட்டம் என்று அழைக்கப்படும் காணி தி. ப. 6 உம் செய்பயிர்வான் பயிரும் வீடும் கிணறும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு வீரேசு வயிரமுத்துவும் பங்காளரும் மேற்கு காத்தி சின்னத்தம்பியும் காத்தி வேலாயுதமும் நவரெட்டினம் முதலையாவும் பதிவிலக்கம் ㎏ 372/239.

இ. கனகரெட்டினம்.
கொம்மிஷனர் &
விலைமதிப்பளர்
35/2. கொழும்புத்துறை
வீதி,
சுண்டிக்குளி.
யாழ்ப்பாணம். 2878

### புத்தூர் கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு வேலைகளுக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து "சீல்" வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். வேலைகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/ ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்துவதன் பேரில் 1971-7-12-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை என்னால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் தாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

தேவையான மேலதிக விபரங்களை புத்தூர் கிராமாட்சிமன்றப் பணிமனையில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

#### வேலைகளின் விபரம்

1 அம்மன் கோவிலடி ஒழுங்கை - சிறுப்பிட்டி.
2 பெரிய பொக்கணை றோட்டு - வாதரவத்தை.

மு. திருநாவுக்கரசு,
தலைவர்,
புத்தூர் கிராமாட்சி
மன்றம்.

கிராமாட்சி மன்றப்
பணிமனை,
புத்தூர்.
1971-6-28. 2877

### பொங்கல் விழா

குருநகர் புதன் மண்டைதீவு கண்ணகை அம்மன் வருடாந்த பொங்கல் விழா அடுத்தமாதம் 9ம் திகதி தொடக்கம் 12ந்திகதி வரை நடைபெறவிருந்தது இப்பொங்கல் விழா எதுவித மாற்றமுமின்றி வருடம் தோறும் நடப்பதுபோலவே நடை பெறவிருக்கின்றது.


மனோகரா (யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி. ப. 2-30 இரவு 6-30 10-00
முத்துராமன் சுந்தரராஜன் நாகேஷ் - ராஜஸ்ரீ லக்ஷ்மி, நடித்த
3வது வாரம்
நவக்கிரகம்

ராணி (யாழ்ப்பாணம்)
பி. ப. 2 30 இரவு 6-30 10-00
ரவிச்சந்திரன் - லட்சுமி தங்கவேலு - விஜயஸ்ரீ நடித்த
ஜீவ நாடி

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி 2-00 இரவு 9-45 க்கும் மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி - ரங்காராவ் நடித்த
விடிவெள்ளி

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது
Daily at 5-15, 7-15 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
வரடங்குச்சட்டம் நீக்கப்பட்டமையால் பழைய நேரத்திற்கு காட்சிகள் காண்பிக்கப்படும்
★ ஜெமினி கணேசன் ★ விஜயகுமாரி
நாகேஷ் - ராமபிரபா - ராஜ்ஸ்ரீ - அசோகன்
நடித்த
மனைவி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, இரவு 6-30 10-00
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

யாழ்.நகரில்
'லிடோ'
தியேட்டர் திறப்புவிழா
5 7-71 திங்கட்கிழமை
★ சிவாஜி ★ சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்



WANTED

For part-time work with A. L. classes a graduate with Maths and Physics or Chemistry. Apply immediately in person to the President
Jaffna College,
Vaddukoddai.
2627

கார் ஸ்கூட்டர் விற்பனைக்கு

EL2000 தொடர் இலக்கமுடைய வாக்ஷால் வைவேன் (Vauxhall Wyvern)
1 Sri 7000 தொடர் இலக்க முடைய ஆஸ்டின் மெட்ரோ பொலிற்றன் (Austin Metropolitan)
5 Sri 8000 தொடர் இலக்கமுடைய லாம்ப்ரெட்டா SX ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு.
'சமுத்திரா' ரிரேடீஸ்
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
2880

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி
பி.ப.6-30 9-30
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா?

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-30 10-00
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
கண்ணன்
என் காதலன்


### திருமண அழைப்பு

நாகராசா — நாகேஸ்வரி அம்மாள்

நிகழும் விரோதி இருது ஆண்டு ஆனி மாதம் 19-ம் திகதி (3-7-71) சனிக்கிழமை பகல் 11 மணி 7 நிமிடம் தொடக்கம் 12 மணி 30 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் முள்ளியந்தீவு வி. செல்லையா தம்பதிகளின் மூத்தமகன் திருநிறைசெல்வன் நாகராசாவுக்கும் எமது மூத்தமகள் திருநிறைசெல்வி. நாகேஸ்வரி அம்மாளுக்கும் வவுனியா கந்தசாமி கோவிலில் திருமணம் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் வருகைசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். கொண்டாட்டம் எமது இல்லத்தில் 3 நாட்கள் நடைபெறும்.

சி. நாகலிங்கமும், பாரியாரும்,
முகாமையாளர் ஆசிகுளம்
ப. நோ, கூ. சங்கம்

கல்வீரங்குளம், வவுனியா. 2879


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி ப.2-30, இரவு 6-30 10-00
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
(இரு வேடங்களில்)
நாகேஷ் - விஜயகுமாரி - சுந்தரராஜன்



மகனே நீ வாழ்க

# பாகிஸ்தானுக்கு மேலும் 5 கப்பல்களில் ஆயுதம் அனுப்பப்படும்

## யு. எஸ். அதிகாரி தகவல்

நியுயோர்க் ஜூன் 30

அமெரிக்காவிலிருந்து மேலும் நான்கு ஐந்து கப்பல்கள் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் ஏற்றிச் செல்லவிருக்கின்றன.

ஏற்கனவே மூன்று கப்பல்கள் பாகிஸ்தானுக்கு ஆயுதம் ஏற்றிக்கொண்டு புறப்பட்டிருப்பது தெரிந்ததே. இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் மேலும் நான்கு அல்லது ஐந்து கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு புறப்படவிருக்கின்றன. இத்தகவலை அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பல்களில் ஆயுதம் ஏற்றிச் செல்வதற்கான 'லைசென்ஸ்' ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### கனடா ஆயுதம் ஏற்றத் தடை

அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஆயுதம் ஏற்றிச் செல்லும் 'பத்மா' என்ற கப்பல் இப்பொழுது கனடாவின் மொன்ட்ரியால் துறைமுகத்தில் இருக்கின்றது. இந்தக்கப்பலில் பாகிஸ்தானுக்கான ஆயுதங்கள் எதுவும் ஏற்றக்கூடாது என்று கனடா அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றன.

### கென்னடி கண்டனம்

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் அனுப்பியிருப்பதை செனட்டர் கென்னடி பலமாகக் கண்டித்திருக்கின்றார். தமக்கும் மற்றவர்களுக்கும் அமெரிக்க அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிக்கு இது மாறான செய்கையாகும் என்று செனட்டர் கென்னடி தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவதைத் தடுப்பதற்கு வழி செய்யும் மசோதா வொன்றை செனட்சபையில் கொண்டுவரப்போவதாக செனட்டர் கென்னடி தெரிவிக்கிறார்.

### பிரி.குழு மறுப்பு

கிழக்குப் பாகிஸ்தானுக்கு அகதிகள் திரும்பிச் செல்வதை இந்தியா தடுத்து வருவதாக பாகிஸ்தானியர் கூறிவருவதை கிழக்குப் பாகிஸ்தான் நிலைமைபற்றி ஆராய வந்த பிரிட்டிஷ் ஆட்சிமன்றக்குழு மறுத்திருக்கின்றது. தினமும் ஆயிரக்கணக்கான அகதிகள் இந்தியாவுக்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் எவராவது திரும்பிச்செல்லவிரும்பினுல் தயக்கமின்றி போகலாம் ஏனென்றுல் எல்லையில் அவர்களைத் தடுப்பவர்கள் யாருமில்லை என்று அந்தக்குழுவிலுள்ள ஒருவர் கூறினுர். மனித இனத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த கொடுமைக்கு பாகிஸ்தான்தான் பொறுப்பு என்று இன்னெருவர் தெரிவித்தார். தாங்கள் நேரில் கண்ட காட்சிகளை தங்கள் ஆட்சிமன்ற சபையிடம் எடுத்துக் கூறப்போவதாக அவர்கள் தெரிவித்தனர்.

......

### ஆயுதத்தடுப்பு மாநாட்டில்

## சீனு பங்குபற்றினுல் அமெரிக்கா வரவேற்கும்

நியுயோர்க். ஜூன் 30

அணு ஆயுதத் தடை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சீனு கலந்துகொள்ளுமானல் அதை அமெரிக்கா வரவேற்குமாம்

அமெரிக்க அதிகாரி ஒருவர் இதைத் தெரிவித்தார்

அணு ஆயுதத்தடை சம்பந்தமாக ஆலோசனை நடத்த அணுவல்லரசுகளின் மகாநாடு ஒன்றை சோவியத் யூனியன் அழைத்திருக்கின்றது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ள பிரஞ்சு அரசு ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருக்கின்றது. அப்படியான கூட்டம் ஒன்று நடைபெறுமானுல் பிரிட்டனும் கலந்துகொள்ளும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது சீனு இன்னமும் கருத்தெதுவும் தெரிவிக்கவில்லை.

### அமெரிக்க

## இரகசிய தஸ்தாவேஜு பற்றி பிராவ்தா கருத்து

மாஸ்கோ, ஜூன் 30

"சமீப காலத்தின் சம்பவங்கள் ஐக்கிய அமெரிக்க ஆளும் வட்டாரங்களுக்குள்ளே இருக்கும் ஆழமான பிளவை எடுத்துக்காட்டுகின்றன" என்று பிராவ்தாவின் வாஷிங்டன் நிருபர் போரிஸ்ஸ்ட்ரெல்னிகோவ் எழுதியுள்ளார்.

பெண்டகன் ரகஷிய தஸ்தாவேஜுகளின் பிரசுரம் குறித்து எழுதுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

'தென் கிழக்காசிய அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரான பெரும் சதித்திட்டங்கள்பற்றி வாஷிங்டனில் பேசப்படுவதாக அக்கட்டுரை கூறுகிறது. பெண்டகன் தஸ்தாவேஜு பத்திரிகையில் வெளியாவதற்குக் காரணமான பின்னணியில் இருந்த பிரபலஸ்தர்களை இக்கட்டுரை அம்பலப்படுத்தி செய்துள்ளது; நிலைமைகள் தடுமாறத் தொடங்கும்முன் வியட்நாம் சகதியிலிருந்து அமெரிக்கா வாபஸ் பெறுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று இவர்கள் நம்புகிறுர்கள்.

ஒரு காலத்தில், இந்தோ-சீனுவில், ஐக்கிய அமெரிக்கா மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பை ஆதரித்த பெருந்தொகையான அரசியல்வாதிகள், பொதுத்தலைவர்கள், முதலீட்டாளர்கள், பத்திரிகைச் சொந்தக்காரர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இன்று இந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்கிறுர்கள். இந்த மாற்றத்துக்கான காரணங்கள் மிகத்தெளிவானவை. இந்த யுத்தத்தின் தேவையற்றதன்மை, இராணுவவெற்றிக்குப் பாதகமான சூழல் இந்தோ சீனுவில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பினுல் அதிகரித்துவரும் உள்ளூர் சமூகப் பிரச்னைகள், உலகமக்களின் கண்முன்னே இழந்துவரும் கீர்த்தி. அனைத்துக்கும் மேலாக, அமெரிக்க மக்களிடையே இந்த யுத்தம் செல்வாக்கிழந்துள்ளது. இவைகள்தான் மனமாற்றத்துக்குக் காரணமானவை என்று ஸ்ட்ரெல்னிகோவ் தமது கட்டுரையில் சுட்டிக் காட்டுகிருர்.

"பொஸ்டன் குளோப்" பத்திரிகை, பெண்டகன் ரகஷிய தஸ்தாவேஜுவின் நிபுணர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது.

பெண்டகன் அறிக்கைப் பட்டியலின் விவகாரம் வருமாறு: 1964 ஜூன் 2-ம் திகதி ஹொனலுலுவில் நடைபெற்ற பெரும் புள்ளிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஐக்கிய அமெரிக்காவின்பாதுகாப்புக் காரியதரிசி ஆர். மக்னமாரா அமெரிக்கத் தூதுவர் கேபோட் லொட்ஜ் ஜெனரல் டெய்லர். பசிபிக்கிலுள்ள அமெரிக்கராணுவத்தின் பிரதம தளபதி எச்பெல்ட் சி ஐ ஏ நிறுவனத்தின் டைரக்டர் ஜே. மக்கோன். இவர்கள் வியட்நாமில் அணு ஆயுதங்களைப் பாவிப்பதுபற்றிக் கலந்தாலோசித்தனர்.

இக்கூட்டத்தின் விவரங்களை பொஸ்டன் குளோப் வெளியிட்டிருந்தது. காரியதரிசி மக்னமாரா அணு ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்கு சாதகமான நிலைமைகளைக் குறித்துப் பேசினுர். அட்மிரல் பெல்ட் தமது உரையில் அணு ஆயுதங்களைப் பாவிக்கும்போது அதைக் கம்யூனிஸ்டுகளால் தாக்குப்பிடிக்க முடியாதென்றும் அதைப் பல்வேறு விதங்களில் பிரயோகப்படுத்துவதற்கு எந்தவித கட்டுப்பாடும் இருக்கக்கூடாதென்றும் குறிப்பிட்டார்.

அதே தினத்தில் நியூயோர்க் டைம்ஸ் வாஷிங்டன் போஸ்ட் ஆகிய பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்ட செய்திகளைப் பிரசுரிக்கும் தடை உத்தரவுகள் பொஸ்டன் குளோப்பைப் பொறுத்தும் அமுலுக்கு வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது என்று ஸ்ட்ரெல்நிகோவ் எழுதுகிருர்.

மறுநாள் இத்தக்கட்டுப்பாடுகளுக்குள் நாலாவது பத்திரிகையாகிய 'சிக்காகோ' சன்-டைம்ஸையும் பாதித்தது இப்பத்திரிகை ஜனுதிபதி நுகோடின் டிம்மின் சைகோன் அரசாங்கத்தைவிழுத்துவது சம்பந்தமாக பின்னணி வேலைகள் அடங்கிய பெண்டகனின் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

......

## சமாதானமும் சர்வநாசமும்

ஸ்ரொக்ஹோம். ஜூன் 30

உலகில் ஆகமொத்தம் 50 000 மிகாதொன்' அணுகுண்டு வகைகள் உள்ளன வென்றும், உத்தேசமாக உலகிலுள்ள பிரதியொருநபருக்கும் 15 தொன் குண்டு உள்ளது என்றும் ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது

இதன் நாசசக்தி எவ்வளவு தெரியுமா? ஹிரோஷிமாவிலும், நாகசாக்கியிலும் போடப்பட்ட அணுகுண்டைவிட 2 500,000 மடங்கு பயங்கரமானது. இது உலகின் நகரங்கள் யாவையும் பல முறைகள் தரைமட்டமாக்கி பலமுறை மக்களைக் கொல்லவும் கூடிய சக்தி கொண்டது

இதைவிட ஒருபேராபத்து மனிதகுலத்தை ஒருக்காலும் பயமுறுத்தியதில்லை,

உலக சமாதானம் ஒரு நூலிழையில் தொங்குகிறது. ஒரு சிறியதவறு, ஒரு சிறிய விபத்து உலகத்தை அழித்துவிடக்கூடும் என அந்நிறுவனம் கருத்துத் தெரிவித்துள்ளது.

......

## அராபுக்களுக்கு இஸ்ரேல் நஷ்டஈடு

டெல்அவிவ், ஜூன் 30

கிழக்குஜெருசலத்திலுள்ள அராபுகளுக்கு நஷ்டஈடு வழங்க இஸ்ரேலிய அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது 1948ம் ஆண்டில் அராபுகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் பாதிக்கப்பட்ட அராபுக்களுக்கு நஷ்டஈடு வழங்க 1 கோடி டொலர் இஸ்ரேலிய அரசு ஒதுக்கியுள்ளது.

## அதிகரிக்கும்

குருநகர் புதன்

இலங்கையில் இருக்கும் 300 காரியாதிகாரி பிரிவுகளில் கூடிய கிராமங்களையும் நிலப்பரப்பையும் அடக்கியுள்ள சில காரியாதிகாரி பிரிவுகள் இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கின்றன. இத்தத் திட்டத்தின் வடபகுதியைச் சேர்ந்த வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவும் தீவுப்பகுதி காரியாதிகாரிபிரிவும் இரண்டாகப் பிரிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

## பிரயாணிகளுடன் விமானம் கடலில் வீழ்ந்தது!

கலிபோர்னியா, ஜூன் 28

கலிபோர்னியாவிலிருந்து 30 பிரயாணிகளுடன் புறப்பட்ட விமானம் ஒன்று பசுபிக்கடலில் விழுந்து நொருங்கியது.

இந்த கலிபோர்னிய வாடகை விமானம் புறப்பட்டசில நிமிட நேரத்தில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் யந்திரக் கோளாறினுல் கடலில் விழுந்து நொருங்கியது. ஒருவர் மட்டும் உயிர் தப்பினுர் என்று கடற்கரை காவலாளர் ஒருவர் தெரிவித்தார்.

NIKONA SALES

# நிகோனு ஏல நிலையம்

1-ம் மாடி சங்கரப்பிள்ளை கட்டிடம்

166, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

## ஒரு புதிய சந்தர்ப்பம்

## யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு ஏல நிலையம்

### எமது நோக்கம்

* உங்கள் பாவனைக்குத் தேவைப்படாத நல்ல நிலையிலுள்ள அசைவுப் பொருட்களை எமது காட்சி அறைகளில் பார்வைக்கு வைப்பதன் மூலம் நியாயமான விலைகளுக்கு அவற்றை விற்பனை செய்து உதவுவோம்.

** காட்சி அறையில் விற்பனைக்கு முன்னரே பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியின் அரைப் பகுதிப் பணத்தை உங்கள் அவசியத் தேவையைப் பொறுத்து பெற்றுக் கொள்ள உதவுவோம்.

*** உங்களுக்குத் தேவைப்படும் நல்ல நிலையிலுள்ள இரண்டாந்தரப் பொருட்களை நீங்கள் விரும்பி வாங்கிக் கொள்ளவும் மேலும் புதிதாக அவைகளை வாங்காது விடுவதன் மூலம் அதிக பணத்தை உங்களிடம் மீதப்படுத்தவும் முடியும்.

விற்பனையாளருடன் கலந்தாலோசித்து மிகக் குறைவான விலைகள் பொருட்களின் மீது குறித்து வைக்கப்படுவதால் பொருட்களுக்குரிய நியாயமான விலையைக் கொடுப்பதற்கும், பார்த்தவுடன் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உதவி புரிகிறோம்.

எமது நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசிப் போயாவுக்கு முதல் தினம் [Pre-Poya] பி. ப. 3 மணிக்கு வழமையான ஏல விற்பனை இடம் பெறுவதை எதிர்பாருங்கள் கேள்வியில் வெற்றி பெறுவோர் விலையின் கால் பகுதியை ஸ்தலத்திலேயே செலுத்த வேண்டும். மிகுதிக் கணக்கை முடிப்பதற்கு இரு வார அவகாசம் அளிக்கப்படும்.

தயவு செய்து எமது விற்பனை நிலையத்துக்கு ஒரு முறை விஜயம் செய்து எமது சேவையைப் பெற்று திருப்தி அடையுங்கள்.

எஸ். நரசிங்கம் J. P

ஏல விற்பனையாளர்.

# நன்மையான திட்டங்களை முறியடிக்க முயல்கின்றனர்

## கம்யூனிஸ்ட் கூட்டத்தில் பேச்சு

குருநகர், புதன்

"கூட்டுமுன்னணி அரசாங்கம் மக்களுக்கு வேண்டிய நன்மைபயக்கும்திட்டங்களை உருவாக்கி அமுலுக்குக் கொண்டுவரும் சமயத்தில் அதனை முறியடிக்கும் நோக்கத்தில் முதலாளித்துவவாதிகளும், பிற்போக்காளர்களும் சேர்ந்து வேலைசெய்து வருகின்றனர்."

குருநகர் கம்யூனிஸ்ட்டு முற்போக்கு வாலிபர் சங்கக் காரியாலயத்தில் திரு. ஏச். எஸ். வியனகே தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு ஐ ஆர். அரியரத்தினம் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

திரு. அரியரத்தினம் மேலும் கூறியதாவது:- இப்பொழுது அரசாங்கம் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விலைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள போதிலும் முதலாளிமார் அதனை மக்களுக்கு விநியோகம் செய்யாது பதுக்கி செயற்கைத் தட்டுப்பாட்டினை உருவாக்குகிறார்கள். இதனை முறியடிக்க இவ்வாலிபர் சங்கம் மக்களுடன் இணைந்துசெயற்படவேண்டும்.

திரு. ஏச். எஸ். வியனகே பேசுகையில், எமது அரசாங்கம் செய்துவரும்நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்கள் மத்தியில் அரசாங்கத்தைப்பற்றி நிலவும் தப்பபிப்பிராயத்தை நீக்க வேண்டும் என்றார்.

க. முத்து, என். இராஜதுரை செயலாளர் கே. எம் இராசு ஆகியோரும் பேசினர். கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

குருநகர் பகுதியில் ஆயுர்வேத மருந்து வநிலையம் அமைக்கப்படவேண்டும்.

குருநகர்கப்புமால் மைதானத்திற்கு அருகிலுள்ள கடலில் கடந்த சிலவாரங்களாக மலவாளிகள் கழுவிச் சுத்தம் செய்வதினால் இப்பகுதி மக்களுக்கும் ஓய்வு பெறவருபவர்களுக்கும் சுகாதாரக் கேட்டினை உண்டுபண்ணுவதால் மலவாளிகள் இக்கரையோரத்தில் சுத்தம் செய்யப்படுவதுடன் நிறுத்தப்படவேண்டும்.

குருநகர் சென்றோக் கலவன் பாடசாலையை மகாவித்தியாலயத் தரத்திற்கு உயர்த்தப்படல் வேண்டும்.

---

## 'ஆதரிக்கக் காரணம்'

மாவிட்டபுரம், புதன்

'அரசியல் நிர்ணயசபை புதிதாக நாட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த சபை மூலம் நாட்டில் பல மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதில் தமிழ் மக்களும் பல நன்மைகளைப் பெறுகிறார்கள். தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ இவ் அரசியல் நிர்ணசபை உதவக் கூடியதாக அமைந்துள்ளது இதனால்நாம் இந்தசபையை ஆதரிக்கிறோம்'

காரைநகர் சைவபரிபாலன வித்தியாலய முன்னாள் முகாமையாளராக இருந்த இ. நாகலிங்கத்தின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைத்துப் பேசுகையில் வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. தியாகராசா கூறினார்.

காரைநகர் சைவமகாசபையில் இருந்து உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதை யடுத்து திரு. வி, சச்சிதானந்தம் தலைமையில் கூட்டம் நடந்தது.

---

## இந்தியாவின் இலவச பயிற்சி

கோட்டை, செவ்வாய்

இலங்கை இராணுவத்தினருக்கு 'கொரில்லாபோர் முறையில் நுணுக்கங்களைப் பயிற்ற இந்தியா முன்வந்துள்ளது. இப்பயிற்சி இந்திய ராணுவத்தால் நடாத்தப்படும் பயிற்சிக் கல்லூரிகளில் இலவசமாக அளிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவின் இந்த உடன்பாடு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இந்தியத் தூதர் திரு. வை கே பூரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

வடமாகாணத்தில்

## 79 புதிய கரபந்தாட்டத் திடல்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

விளையாட்டமைச்சின் அனுசரணையுடன் நாடு முழுவதிலும், காரியாதிகாரிப் பிரிவினால் நடாத்தப்பட்டுவந்த 'கரபந்தாட்ட புதிய திடல்' திறப்பு விழா வைபவம், வடமாகாணத்தில் சகல காரியாதிகாரிப் பிரிவிலும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள மொத்தம் 13 காரியாதிகாரி பிரிவுகளிலும் 79 புதிய கரபந்தாட்டத் திடல்கள் திறக்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களிலும், சனசமூக நிலையங்களிலும் மேற்படிப் புதிய விளையாட்டுத் திடல்கள் திறக்கப்பட்டுள்ளன

கரபந்தாட்டத்தின் தரத்தை உயர்த்துவதற்காகவே மேற்படித் திடல்களை விளையாட்டமைச்சு நாடு பூராவிலும் திறந்திருப்பதாக, வடமாகாண விளையாட்டமைச்சின் பிரதம அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே நி)

......

6 ஓவர்கள்

## மென்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாண மென்பந்துக் கிரிக்கெட் சங்கத்தினரால் அடுத்த மாதம் முற்பகுதியில், யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக '6 ஓவர்கள்' மென்பந்துப் போட்டியொன்றை நடாத்தவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இப்போட்டி நடாத்தப் படுவதினால் மிகக் கூடுதலான விளையாட்டுக் கழகங்கள் இந்தப் போட்டியில் பங்கு பற்ற முன்வந்திருப்பதாக, மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி திரு. கே. எஸ். எவ். சேவியர் தெரிவித்துள்ளார். (தே நி)

---

## ‘வறுமையை போக்குவது இளைஞர் கடமை’

யாழ்ப்பாணம் வியாழன்

"பொருளாதாரத் துறையில் ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின் அது இளைஞர் கையில்தான் தங்கியுள்ளது. தேசப்பற்றுள்ள சலியாத முயற்சியுள்ள கட்டுப்பாடுள்ள இளைஞர்கள் ஒரு நாட்டின் செல்வங்கள் மட்டுமல்ல வறுமை அடைந்துள்ள ஒரு நாட்டையே வளமாக்கும் வல்லமை உள்ளவர்கள் இதனை இந்த நாட்டின் ஒவ்வொரு இளைஞனும் நன்கு சிந்தித்து கருத்தோடு செயலாக்குவது இப்போது மிகவும் அவசியமானதொன்று."

இவ்வாறு பூநகரி அத்தாய் கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் செயலாளர் திரு. சி சிவசுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்காது ஊரில் செய்யவேண்டிய அவசிய தேவைகளை இளைஞர்கள்சிரமதானமூலம் செய்ய முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு ச பரமு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். நடராசா உட்பட பலர்பேசினர் மரணவிசாரணை அதிகாரியும் மேற்படிசங்கத்தின் முன்னாள் தலைவருமான திரு த. பரமசாமியின் மறைவுக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

---

# கிராம அபிவிருத்தியில் அரசாங்கம் அக்கறை

யாழ்ப்பாணம், புதன்

பெற்றோர் ஆசிரியர்களை மதித்தலும் சமயாசாரியார்கள் காட்டிய நெறிநின்று வாழுவதும் மாணவர்கள் இளமையில் பழக வேண்டிய கல்வியாகும் சிறந்த நல்லொழுக்கமே மேலான செல்வம். ஆகவே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க நாம் நல்லபண்புகளை வளர்க்க வேண்டும். நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்த பெற்றோர் ஆசிரியர் - மாணவர் ஆகிய முத்திறத்தினரும் கல்விப்பகுதியினருக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்'

இவ்வாறு வடபகுதிக்கல்வி ஆலோசகர் திரு ஆ. தம்பித்துரை பறந்தன் குமரபுரம் சைவ வித்தியாலய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு ஆர். ரி. சுப்பிரமணியம்தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு ஆ. தம்பித்துரை தொடர்ந்துகூறியதாவது:

இன்றைய அரசாங்கம் கிராமப்புறங்களின் அபிவிருத்தியையே முதல் இலக்காகக் கொண்டுள்ளது' ஆகவே கிராமப் பாடசாலைகளுக்கு சகல வசதிகளும் கிடைக்கும். கிராமப்புறத்து மாணவர்கள் கல்வி உலகில் பிரகாசிக்க நல்ல வாய்ப்புக்கள் உண்டு. பாடசாலைகள் மூலமே நாம் பல நல்ல இலட்சியங்களைப் பரப்ப முடியும். ஆகவே இத்தகைய நிறுவனங்கள் நன்கு பரிபாலிக்கப்பட வேண்டும்.

பாடசாலை அதிபர் திரு ஆர். ரி சுப்பிரமணியம் பேசுகையில் காலந்தவறாமையாகிய நற்பழக்கத்தை நாம்மேலும் பயில வேண்டும். நேரம் பொன்போன்றது. போன நேரம் மீண்டுவரமாட்டாது ஆகவே நாம் ஒவ்வொரு கணத்தையும் சீரிய முறையில் உபயோகிக்க வேண்டும். (கு.வி.ம)

---

## சைவ முன்னேற்ற சங்க நிர்வாகிகள்

கொம்பனித்தெரு, செவ்.

கடந்தவாரம் நாவலர் சமய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச்சங்கதொண்டரணியின் மூன்றாவது மகாசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

காவலர்கள்: திருவாளர்கள் இ லக்ஷ்மணன், கு குருசாமி, கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா, கேணல் இரா சுப்பநாயகம். திருமதி சாலம் லக்ஷ்மணன்; திருமதி ப பாலேந்திரா, தலைவி: திரு க பாலசுப்பிரமணியம்; தலைமைத் தலைவர்: திரு வ இ இராமநாதன், அணித்தலைவர்கள்: திரு ச ஆனந்ததியாகர், திரு பெ பூமிநாதன், திரு தி செல்லத்துரை, பாலரஞ்சனி தம்பித்துரை, லோகேஸ்வரி இராஜேந்திரராஜ், முத்லட்சுமி, பெருமாள்.

விபுலானந்தர் அணி, இராமகிருஷ்ணர் அணி, ஆறுமுகநாவலர் அணி, கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அணி, கஸ்தூரியார் அணி, சாரதாதேவி அணி ஆகிய இவ்வணிகள் நிர்வாகம் சமயம் கல்வி சமூகசேவை பொருளாதாரம் ஆகியதுறைகளில் முன்னின்றுழைக்கும் பிரிவுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

## தண்ணீர் கஷ்டம் நீங்கியது

குருநகர் புதன்

ஊர்காவற்றுறை பட்டினசபை எல்லைக்குள் தண்ணீர் விநியோகம் செய்யும் இயந்திரம் பழுதடைந்திருந்ததால் கடந்த ஒருமாத காலமாக ஏற்பட்டிருந்த தண்ணீர் கஷ்டம் தற்பொழுது நீங்கியுள்ளது. ஊர்காவற்றுறைப் பட்டினசபை காரியதரிசியின் விடா முயற்சியாலும் பட்டினசபையினரின் ஒத்துழைப்பினாலும் இந்த யந்திரம் சென்ற வாரம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

......

## விளையாட்டுப் போட்டிமுடிவுகள்

அரியாலை, புதன்

கொழும்புத்துறை வாசிகசாலையின் ஆதரவுடன் சென்ற சில வாரங்களாக கொழும்புத்துறையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

சட்டுவரப்போட்டி: கீழ்ப்பிரிவு: வே. யோ. சத்தியநாதன், வி. சிறீநாதன், பொ ஈஸ்வரன்.

மேற்பிரிவு: ந இரத்தினசிங்கம், க வரச்செல்வம், செ தங்கவேல்.

பேச்சுப் போட்டி:-

கீழ்ப்பிரிவு: ஐ சிறீஸ்காந்தராசா, க நவகுமாரி. வே யோ சத்தியநாதன்.

மேற்பிரிவு: சோ யோகசுந்தரம், க வரச்செல்வம் ந இரத்தினசிங்கம்.

குண்டெறிதல்: ஊ ஸ்ரீசந்திரகுமார், மனோகரன், ந இரத்தினசிங்கம்.

நீளம் பாய்தல்: பொ சாலசிங்கம், ஐ சிறீஸ்காந்தராசா.

---

## மார்ச்சியவகுப்புகள்

யாழ்ப்பாணம் வியாழன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 28-வது ஆண்டு விழாவை ஒட்டி வருகிற மாதம் 3-ம் திகதியிலிருந்து மார்க்சிய வகுப்பொன்று நடத்தப்படவிருக்கிறது இதற்கான ஒழுங்குகளை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் வடபிரதேசக்கிளை செய்து வருகிறது இவ்வகுப்புக்களை வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிப்பிரமுகர்கள் நடத்தவிருக்கின்றனர்.

---

## "உள்ளக்கமலத்தில் ஊறியதேன்"

அரியாலை, செவ்.

"மாணிக்கவாசகரின் தூய உள்ளக் கமலத்தில் இருந்து ஊறிய தேன் சொட்டுக்களே திருவாசகம் அதனூன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் இது ஒரு ஞானக்கருவூலம் எலும்பை உருக்கியும் நெஞ்சை நெகிழ்த்தியும் ஆக்குந்திறன் திருவாசகத்திற்கு உண்டு"

மேற்கண்டவாறு நேற்று மூன்றும் பனை வைரவர் ஆலயத்தில் நடந்த மணிவாசகர் விழாவில் தலைமையுரையாற்றிய பண்டிதர் இராசையா குறிப்பிட்டார், மேலும் அவர்தமதுஉரையில் போது இறைவனை அறிவால் அறிய முடியாது. பலகலும் தலங்கிடந்து காணவேண்டும் மனத்தையுடையவன் மனிதன் கல்வியினால் மனதைப் பண்படுத்தி ஞானத்தினால் அவனை புணர்ந்து கொண்டால் பிறவியின் நோக்கம்நிறைவேறும்பிறவி கிடைத்ததன் நோக்கம் இனிப்பிறவாமை இருப்பதற்காகவே தன்னையறிந்த பின்பு தலைவனை அறிய வேண்டும். தன்னை அறிபவன்ஞானி உலகை அறிபவன் விஞ்ஞானி ஞானி உயிருக்கு மாண்பு தேடுகிறான் ஆனால் உயிரின் மாண்பேபிறப்பின் மாண்பு எனத்தெரிவித்தார் பண்டிதர் இரா சிவசுப்பிரமணியமும் சொற்பொழிவாற்றினர்.

தொடர்ந்து சிறுவர்களுக்கான பேச்சுப்போட்டிகளும் பாராயணம், விசேட பூஜைகள் பஜனைகளும் இடம் பெற்றன.

---

## கரபந்தாட்ட திடல்

சுழிபுரம் செவ்வாய்

விளையாட்டு அமைச்சின் உதவியுடன் கரபந்தாட்ட திடல் ஒன்று அராலி நாகேந்திர மடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அராலி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். நாகலிங்கம் விளையாட்டுத் திடலை திறந்துவைத்தார். திரு. கே. ஜெயரத்தினம் வரவேற்புரை கூறினார்.

---

## கரபந்தாட்ட உபகரணங்கள் அன்பளிப்பு

தாவடி, புதன்

கோண்டாவில் வேதபாரணய சனசமூக நிலைய கரபந்தாட்டக் குழுவினருக்கு அரசாங்கத்தால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு உத்தியோகத்தர் திரு. தேவபாலசுந்தரம் இவ்வுபகரணங்களைக் கையளித்தார். விளையாட்டுப் போதனாசிரியர் திரு. துரைசிங்கமும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டார். கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு சி க. சபாபதி விளையாட்டை ஆரம்பித்துவைத்தார்.

---

## மக்களின் நலன்கருதியே...

யாழ்ப்பாணம், வியா

சகல பாவனைப் பொருட்களும் நுகர்வோர்களுக்கு கிடைக்க வேண்டும்என்பது தான் எனது குறிக்கோள் பாவனைப் பொருட்கள் கிடைக்காமல் கஷ்டப்படும் மக்களுக்காகத்தான் ஒவ்வொரு கிளை டிப்போக்களிலும் முறைப்பாட்டுபுத்தகம் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்கதின் புதிய நிர்வாக ஆரம்ப விழாவில் சங்கத்தலைவர் திரு அல்பிரட் துரையப்பா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா விளக்கேற்றி நேற்று விழாவை ஆரம்பித்துவைத்தார்.

திரு அல்பிரட்துரையப்பா மேலும் பேசுகையில் நுகர்வோர்களின் வசதிக்காக கிளை டிப்போக்கள் திறக்கும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

திரைப்பட விமரிசனம்

# நவக்கிரகம்

நவக்கிரகங்கள் ஒருபோதும் ஒன்றுசேரமாட்டா. மூலைக்கொன்றாக வக்கரித்துக்கொண்டிருக்கும். இந்த நவக்கிரகங்கள் போல சில குடும்பங்களும் ஒற்றுமையில்லாமல் இருப்பதும் இதை வெளியார்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதும் சாதாரணமாக நாம் காணும் நிகழ்ச்சிகள், காட்சிகள்.

இப்படியொரு குடும்பத்தைத்தான் திரைப்படக் காட்சியாகத் தயாரித்து வேற்றுமைப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு படிப்பினையாகத் திரையிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திற்கு இது அவசியம் என்பதை உணர்ந்தாரோ என்னவோ இப்படம் இப்பொழுது "மனோகரா" தியேட்டர் திரையில் கடந்த சில கிழமைகளாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

"நல்வரவு" என்ற பலகை தொங்கும் பங்களாவைக் கண்டதும் பலநாள் பட்டினியாகக் கிடந்த ஓர் அநாதை ஒரு நேரமாவது நல்ல சாப்பாடு சாப்பிடலாமென்ற ஆசையுடன் அந்த பங்களாவுக்குள் நுழைகிறான். அவனுக்கு அங்கு எதிர்பாராத தோன்றிய போதிலும் சிதறிக்கிடக்கும் குடும்பத்தை ஒன்று சேர்த்துவைக்கும் நல்ல இலட்சியத்துடன் உழைக்கும் அவனுக்கு ஒன்றிரண்டு ஆத்மாக்களின் அனுதாபமும் ஆதரவும் கிடைக்கின்றன. அவன் அந்த அநாதை வீட்டின் சொந்தக்காரன் என்பது அவனுக்குத் தெரியாமலே தன் இலட்சியத்தை நிறைவேற்றி விட்டுச் செல்கிறான்.

அநாதையாக வரும் நாகேஷ் நகைச் சுவையோடு உணர்ச்சிகளையும் கொட்டி அற்புதமாக நடித்திருக்கிறார். நடித்திருக்கிறாரா பாத்திரமாகவே மாறிவிட்டார்.

சுந்தரராஜனுக்குப் புதுமையான பாத்திரம்! பொருத்தமாக நடிக்கிறார். சுநினி ராஜன், முத்துராமன் ஜி. சகுந்தலா, ஆகியோருடன் ரசனியையும் பார்க்கிறோம் யாரும் நடிப்பில் சோடை போகவில்லை.

வாலியின் பாடல்கள், வசனம் டைரக்ஷன் கே. பாலச்சந்தர். சிரிக்கவும் சிந்திக்கவும் பார்த்த ரசிகரவும் "நவக்கிரகம்" பார்க்கக் கூடிய படம்.

— 'திரைவண்டு'

## நீர்விநியோகம் தடை: 100 ஏக்கர் மிளகாய் நாசம்

வவனிக்குளம், புதன்

செல்வபுரம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் காணியில் பயிரிடப்பட்ட மிளகாய்ப் பயிர் சுமார் ஒருமாதகாலம் நீர் விநியோகம் தடைப்பட்டதினால் நாசமடைந்துள்ளதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்தமாதம் சுமார் 25 நாட்களில் செல்வபுரம் பகுதிக்கு நீர்ப்பாய்ச்சப்படவில்லையாம். நீர்ப்பாசன இலாகாவின் நீரிறைக்கும் பம்புகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. பம்புகள் கிடைக்கப்பெற்றதும் கிரமமாக நீர் விநியோகம் கிடைக்குமென நீர்ப்பாசன இலாகா கூறி வருகிறதாம். இதனால் பல ஆயிரம் ரூபா விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

புங்குடுதீவு எழுவர் மரணம்:

## சந்தேக நபர்கள் இருவருக்கும் தொடர்ந்து றிமாண்ட்

ஊரதீவு, புதன்

புங்குடுதீவைச் சேர்ந்த ஊரதீவில் கள்ளுக்கொட்டில் ஒன்றில் கள் அருந்தியதைத் தொடர்ந்து மரணமான எழுவரின் மரணம் சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் நமசிவாயம் நடராசா, இராமசாமி நமசிவாயம் ஆகிய இருவரையும் ஜூலை மாதம் 5ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் திரு. கொலின் டீ மெண்டிஸ் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து இரசாயன பரிசோதகரின் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரியப்பட்ட பின்பே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்தேக நபர்களின் சார்பில் வழக்கறிஞர் ஆர். விசுவநாதன் ஆஜரானார்.

திருவாசகத்தினால்

## அன்புநெறி வளரும்

யாழ்ப்பாணம், வியா

'பக்தி வலையிற் படுவோன் இறைவன். அவனை நெஞ்சம் நெக்குருகிப் பாடிப்பரவினால் அவன் அருள்கிட்டும்' என்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூசையிற் கலந்துகொண்டு உரையாற்றிய திருமதி வசந்தமலர் இராசலிங்கம் கூறினார். இந்த மாமன்ற உபதலைவர் திரு. சண்முககுமரேசன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

திருவாசகத்தினால் உலகில் அன்புநெறி வளர்ந்து எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை வருமென்றும் இதனை எல்லோரும் கற்கவேண்டுமென்றும் தலைவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

மன்றச் செயலாளர் திரு. வ. உமாபதிசிவம் தமது வரவேற்புரையில் விஞ்ஞானம் வளருகின்ற அளவுக்கு மெஞ்ஞானமும் வளர்ந்தால்தான் மனிதன் வையகத்தில் வாழ்வாங்கு வாழமுடியும் என்றார். இந்து மாணவர் மன்றச் செயலாளர் செல்வன் பாலகிருஷ்ணன் நன்றி தெரிவித்துப்பேசினார்.

---

## காலமானார்

சுழிபுரம், புதன்

சிங்கள மொழியில் திருக்குறளை மொழிபெயர்க்கவும் சிலப்பதிகாரத்தை சிங்களத்தில் எழுதவும் பெரும்பங்கு கொண்டு உழைத்த அறிஞரும் சுழிபுரம் பிரபல வைத்தியருமான செ. தம்பையா காலமானார். மலேஷியாவிலும் இலங்கையிலும் வைத்தியராக பணிபுரிந்து அண்மைக் காலத்தில் ஓய்வு பெற்றுக்கொண்ட இவர் சிங்கள மொழியில் அதிக பாண்டித்தியம் பெற்றவர் தமிழ்மொழியிலுள்ள சிறந்த நூல்கள் பலவற்றை சிங்கள மொழியில் மொழிபெயர்க்க ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளார்.

## திருடப்பட்ட சைக்கிளா?

மாவிட்டபுரம், புதன்

களவாடப்பட்டதாகக் கருதப்படும் சைக்கிள் ஒன்றின் உதிரிப்பாகங்களையும், பானரையும் வீடொன்றில் வைத்துப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து மலாவியில் உள்ள ஒரு வீட்டில் திடீர் சோதனை நடத்திய பொலிசார் அங்கிருந்து ஏ. பி. 24731 என்ற இலக்கத்தையுடைய சைக்கிள் பார் ஒன்றையும் மற்றும் உதிரிப்பாகங்களையும் கைப்பற்றினர்.

இச் சைக்கிள் களவாடப்பட்டிருக்கலாமெனக் கருதிய பொலிசார் சைக்கிள் சொந்தக்காரரை தேடிவருகின்றனர் இது சம்பந்தமாக வீட்டுச் சொந்தக்காரர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## கொழும்புத்துறையில் மடுமாதா விழா

யாழ்ப்பாணம், புதன்

கொழும்புத்துறைத் திருப்பதி புனித செபமாலைமாதா கோவிலில் மடுமாதா திருவிழா நடைபெறுகிறது.

இன்று மாலை 6 மணிக்குப் பூசையும் ஆசீர்வாதமும் நடைபெறும். அடுத்த 2-ம் திகதிகாலை 7 மணியளவில் திருநாள் பாடற்பூசையுடன் மாதாவின் சொரூப சுற்றுலாவும் இடம்பெற உள்ளது. வெகு விமரிசையாக நடைபெறவுள்ள இவ்விழா வண பிதா. குலாஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஆட்சேபத் தந்தி

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மூடப்படுவதை ஆட்சேபித்து ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்கமடபிரதேச சபை காரியதரிசி திரு. எம். குமாரசாமி, கல்வி அமைச்சர், தபால் அமைச்சர், நல்லூர் எம் பி ஆகியோருக்கு தந்திகளை அனுப்பி வைத்துள்ளார். இவ்விஷயத்தை மறுபரிசீலனை செய்யும்படியும் அவர் தந்தியில் கேட்டிருக்கின்றார்.

## வரவேற்பு

யாழ்ப்பாணம் வியாழன்

யாழ் இந்துக் கல்லூரியின் புதிய அதிபர் திரு. சபாலிங்கத்திற்கு யாழ் இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம் வரவேற்பொன்றளித்து கௌரவித்தது. அவரது பதவி உயர்வுக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் தீர்மானமொன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## உற்சவம்

உடுப்பிட்டி, வியா

சரவெட்டி தச்சன்தோப்பு விநாயகராலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இம்மாதம் 7-ம்திகதி ரதோற்சவமும் 8-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பதவி உயர்வு

மாவிட்டபுரம் புதன்

காங்கேசன்துறை வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் திருமதி பாலசிங்கம் மாவட்ட வைத்திய அதிகாரி உயர்வு பெற்று பயிற்சி பெறுவதற்காக களுத்துறைக்குச் சென்றுள்ளார்

## [illegible]கூட்டம்

குருநகர், புதன்

வடபகுதி கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் ஒத்திப்போடப்பட்ட வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூலை 4-ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

திரைப்பட விமரிசனம்

# மகனே நீ வாழ்க!

மகனே நீ வாழ்க! என்று வாழ்த்தும் தாய் தகப்பனைப் பெற்ற பிள்ளையும் வாய்திறந்து மகனைப் பெற்றோர் வாழ்த்தக்கூடிய அளவுக்குப் பண்புடன் நடந்துகொள்ளும் மகனும் இந்தக்காலத்தில் எங்கே இருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்கு இன்றே செல்லுங்கள் அங்கே அந்த அருமை மகனையும் அன்புப் பெற்றோர்களையும் காணலாம்!

பண்புள்ள மகனாகவும் உதவாக்கரை மகனாகவும் இரட்டை வேடங்களில் ஜெய்சங்கர் நடிக்கும் 'மகனே நீ வாழ்க' என்ற படத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

அநாதை மாணிக்கம் போலிஸாருக்குப் பயந்து ஒரு பங்களாவுக்குள் நுழைய அந்தப் பங்களாச் செல்வத்துக்காக ஏங்கிக்கொண்டிருந்த ஆயா, உருவத்தில் செல்வத்தை ஒத்திருந்த மாணிக்கத்தைச் செல்வமெனக் கருதி அன்புடன் உபசரிக்க அடித்தது யோகம் மாணிக்கத்துக்கு! காணாமல் போன செல்வத்தைக் காணாமல் அவதியுறும் தாயாரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தந்தையின் அனுமதியுடன் மாணிக்கம் செல்வமாகவே நடித்து பெற்றாள்தான் மகனல்லவென்றாலும் பெருமளவே அவன்தான் "மகனே நீ வாழ்க" என்று ஆசீர்வாதமும் பெறுகிறான்.

அதிகசிக்கலில்லாத கதையைப் படமாக்கியிருக்கிறார்கள். எம் கிருஷ்ணனின் டைரக்ஷன் சிறப்பாக இருக்கிறதென்று பொதுவாகச் சொல்வதுடன் சில இடங்களில் அவரது கைவண்ணம் பளிச்சிடுகிறதென்பதையும் சொல்லத்தான் வேண்டும். ஜெய்சங்கர் இரட்டைவேடங்களையும் சிறப்பாகச் செய்கிறார். கும் கும் குத்துக்களுக்கும் இடமிருக்கிறது. லட்சுமியுடன் காதல் செய்கிறார். லட்சுமியும் மிக நெருக்கமாக நடிக்கிறார். பழைய நடிகை அஞ்சலிதேவி தாயாகவும் பண்பட்ட நடிகர் சுந்தரராஜன் தந்தையாகவும் நடிக்கிறார்களென்று சொல்வதைவிட தாயும் தந்தையுமானார்கள் என்று சொல்வதே பொருத்தம். நாகேஷ் நகைச்சுவைக்குத்தானா, கண்கலங்கச் செய்யும் உணர்ச்சிக் கட்டங்களில் உள்ளத்தைத் தொட்டுவிடுகிறார்.

குமாரிசச்சு, விஜயகுமாரி ஆகியோரும் தங்கள்பாகத்தைக் கச்சிதமாகச் செய்து முடிக்கின்றனர்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களும் சீர்காழிசௌந்தரராஜன், சுசிலா ஆகியோரின் பின்னணியும் நல்லவசனங்களும் 'மகனே நீவாழ்க' என்று ரசிகர்களையும் வாழ்த்தும் படி செய்கிறது. நீங்களும் பார்த்துவாழ்த்திவிட்டு வாருங்களேன்.

—'திரைவண்டு'

## தனிக்கிராமசபை

சுழிபுரம், புதன்

தொல்புரம், மூளாய் கிராமத்துக்கு தனிக் கிராம சபை வேண்டும் எனக்கோரும் ஓர் தீர்மானம் சுழிபுரம் கிராம சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கிராமசபை உபதலைவர் திரு. எஸ். கிருஷ்ணர் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சகல மக்களும் பிரதிநிதித்துவம் வகிக்கத்தக்கவகையில் சுழிபுரம் கிராம சபை வட்டாரங்களும் பிரிக்கவேண்டும் எனக்கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## கத்திக் குத்துக்குப் பலி

காலி, புதன்

காலியிலுள்ள கத்துக்கொட என்ற இடத்தில் கத்திக்குத்துச் சம்பவமொன்றில் ஹிப்சி என்பவர் மாண்டார். 24-ம் திகதி இரவு இச்சம்பவம் நடந்தது. இருவரை இது சம்பந்தமாக காலி பொலிசார் கைது செய்துள்ளனர்.

## 'கிராமத்தின் அழகு...'

சுழிபுரம், புதன்

"ஓர் கிராமத்தின் அழகு அங்குள்ள ஆலயம், கல்வி நிலையம் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது"

இவ்வாறு தொல்புரம் கிழக்கு பூதராகி முத்துமாரி அம்பாள் மகாகும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய புலவர் கா. வேல்முருகன் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு மு. கிருஷ்ணபிள்ளை திருமுறை யோதினார்.

## உற்சவம்

புன்னாலைக்கட்டுவன், புதன்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய உற்சவம் கடந்த 28 ம் திகதி ஆரம்பமாகியது. இம்மாதம் 7-ம் திகதி தேர்த் திருவிழாவும் 8-ம் திகதி கொடியிறக்கமும் நிகழும்"


"யங் ஹாட்ஸ்"

விளையாட்டுக் கழகம்

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து

3-7-71 தொடக்கம் தினமும் மாலை 6-00 மணி முதல்

'ரொம்பொலகேம்ஸ்' நடைபெறும்

மாலை 6-30 க்கு ரூபாய் 100-00 க்கு

'ஸ்னோ போல் கேம்'

லொத்தர் மூலம் தெரிவு செய்யப்படும்

புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்

பல்மைரா கொற்றேஜ்

85, மெயின் வீதி, யாழ்ப்பாணம்

YOUNG HEARTS SPORTS CLUB

With the Lifting of the curfew

TOMBOLA GAMES

Will Commence At 6 P. M. Daily From 3—7—71

A SNOW BALL GAME For Rs 100/- Will be Chosen by LOTTERY At 6-30 P. M.

PALMYRA COTTAGE

85, Main Street, Jaffna

Register open for new members

**மனிதனுக்கு**

உன்னால் பிறர்க்கு நன்மைசெய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு. அதுவே நீ செய்யும் பெரும் நன்மையாகும்.

— விவேகானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] வருஷம் ஆனி மாதம் 17-ந் திகதி (1-7-71)


## புதிய நம்பிக்கை

சனி, ஞாயிறு வார இறுதி விடுமுறைகளை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவருவதென்ற அமைச்சரவை முடிவை ஆளும்கட்சிக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருப்பதும் வாரம் ஐந்து நாட்கள்தான் பாடசாலை நடைபெறவேண்டுமென்ற மக்களின் அபிப்பிராயத்துக்கு கல்வி அமைச்சர் மதிப்புக் கொடுத்திருப்பதும் எதிர்காலம் பற்றி புதிய நம்பிக்கையளிக்கும் நல்ல அறிகுறிகளாகும். தனது உண்மையான பலத்தைப் பயன்படுத்தி முன்னர் செய்யப்பட்ட தவறைத் திருத்திக்கொள்ளத் துணிந்த அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும்.

தணிக்கை செய்யப்பட்டது

மக்களின் ஆசைகளையும் வேட்கைகளையும் ஆட்சி மன்றத்தில் பிரதிபலிப்பது ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் கடமை மட்டுமல்லவென்றும் மக்களின் நிலைமையை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டி அதேசமயம் மக்களின் உணர்ச்சியையும் சரி செய்து சரியானவழியில் கொண்டு செல்வதுதான் அந்த உறுப்பினரின் கடமையும் பொறுப்புமென்று எட்மண்ட் பர்க் என்னும் அரசியல் ஞானி தெளிவாகக் கூறியிருக்கிறார். மக்களின் ஒருபகுதியினரைத் திருப்திப்படுத்தி அவர்களின் வாக்குகளைப்பெற்று ஆட்சிபீடத்துக்குச் செல்லும் நோக்குடன் அவசர முடிவுகள் எடுக்கப்பட்டதன் விளைவாகவே கடந்த ஐந்து வருட காலத்தில் போயா விடுமுறை தினங்களின் மூலம் நமது நாடு தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அனுபவித்த அல்லல் தொல்லைகளும் இழப்புகளும் கொஞ்சமல்ல.

போயா தினங்களை விடுமுறையாக்கியதன் நோக்கத்தில் தவறு சொல்வதற்கு இடமில்லை. ஆனால் அந்த நோக்கம் சரிவரப் பயன்படவில்லை என்பது அனுபவரீதியாகக் கண்ட உண்மை. இதைப் பிரதமரே ஆளும் கட்சிக் கூட்டத்தில் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். என்றாலும் சமய வழிபாட்டுக்கெனப் பௌர்ணமி தினங்களை மேலதிக விடுமுறையாகப் பிரகடனப்படுத்துவதென்ற தீர்மானம் உண்மையில் அந்தப் புனித தினத்தைப் புனிதமாகக் கழிக்கும் மக்களுக்கு ஆறுதலும் திருப்தியும் அளிக்குமென்று நம்பலாம்.

நாட்டில் தோன்றிய நெருக்கடி காரணமாகப் பாடசாலை விடுமுறை நீடிக்கப்பட்டதால் படிப்பு இழந்த நாட்களை ஈடுசெய்யுமுகமாக வாரம் ஆறு நாள் பாடசாலை நடத்தும் திட்டத்தைக் கல்வி அமைச்சர் கொண்டு வந்திருந்தார். பாடசாலை நேரத்தைக் கூட்டுவதால் கல்வித்தரம் கூடுமென்றோ, படிப்பிக்கும் நாட்கள் குறைவதால் கல்வித்தரம் குறைந்து விடுமென்றோ கருத முடியாதென்றும், குறைந்த நேரத்தில் நிறைந்த கல்வியை அளிக்கமுடியுமென்றும் நாம் இதே பத்தியில் எடுத்துக் காட்டியிருந்தோம். ஆறு நாள் பாடசாலையால் அதிக பயன்கிடைக்காது என்றும் பிள்ளைகளுக்கும் மற்றையோருக்கும் வீண் தொல்லைதான் ஏற்படும் என்றும் பொதுமக்கள் தெரிவித்த அபிப்பிராயத்துக்குக் கல்வி அமைச்சர் மதிப்புகொடுத்து அடுத்த ஆண்டு முதல் வாரத்தில் ஐந்து நாள் பாடசாலை முறையை மீண்டும் கொண்டு வருவதற்கும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஐந்தரை நாள் பாடசாலை முறையைக் கொண்டுவருதற்கும் செய்த முடிவு வரவேற்றுப் பாராட்டுதற்குரியது.

தவறு செய்வது மனித இயல்பு. செய்த தவறை உணர்ந்து கொள்வது உயர்ந்த குணம்.

விடுமுறை தினங்களில் அவசரப்பட்டுச் செய்த முடிவுகளின் விளைவை உணர்ந்தும் சிலரின் கூச்சலுக்கும் குரலுக்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் திருத்திக்கொள்ள முன்வந்த அரசாங்கத்தை வர்த்தகத் துறையிலுள்ளவர்கள் மட்டுமல்ல நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் விரும்பும் அனைவருமே போற்றுவர். வாழ்த்துவர்.

தணிக்கை செய்யப்பட்டது

தணிக்கை அதிகாரியினால் தணிக்கை செய்யப்பட்ட பின் இத்தலையங்கம் பிரசுரமாகிறது.


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### குடிநீர் வழங்கப்படுகிறது

ஊர்காவற்றுறை புதன்

தற்போது புங்குடுதீவு மக்களுக்குசமூக சேவைப்பகுதியினரால் லொறி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. இதன் காரணமாக ஓரளவு தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்திருக்கிறது. இருப்பினும் இங்கு வரட்சியின் கொடுமை தீர்ந்த பாடில்லை.

### இவர்களுக்கு தனியாக பண்டசாலைகள்?

பருத்தித்துறை புதன்

வடமராட்சியில் சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதியில் அவர்களுக்கென தனியாக கூட்டுறவுப் பண்டசாலைகள் அமைக்கப்படுமெனத் தெரியவருகிறது. தெரிவுசெய்யப்பட்ட சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளால் இவை நிர்வகிக்கப்படுமென்றும் இத்திட்டத்தில் முதற்படியாக கனுவில், துன்னாலை கரவெட்டி கிழக்கு சக்கி ஓடைக்கரை ஆகிய பகுதிகளில் இக்கூட்டுறவு நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

### நாவடியில் மணிவாசகர் விழா

நாவடி, புதன்

"கல்நெஞ்சையும் கரைய வைக்க வல்லது தித்திக்கும் திருவாசகம். சைவ சமயத்திலுள்ள ஒவ்வொருவரும் பக்தியுடன், பாடிப் பரவசமடைந்து பரமனை எண்ண சிறந்த சாதனம் அது" என்று நாவடி சைவ இளைஞர் மன்றத்தினரால், நாவடிமத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் கொண்டாடப்பட்ட மணிவாசகர் குருபூசை வைபவத்தில் உரையாற்றிய திரு சி. சின்னத்தம்பி கூறினார். திரு ஆ. கமலநாதனின் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### பருத்தித்துறை நகைவியாபாரி கொலைவழக்கு

வல்வெட்டித்துறை, புதன்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ நடராசா ஆகிய இருவரும் 1968ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ந்திகதி பருத்தித்துறை பிரதான வீதியைச் சேர்ந்த நகைவியாபாரியான ஜனாப் எம் எம் சுல்தான் மொகிதீன் என்பவரை வெட்டிக் கொலை செய்ததாக கொழும்பு இரகசியப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் மீண்டும் விசாரணை செய்யப்பட்டது.

கொழும்பு இரகசியப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு பி செனிவரத்தின, சார்ஜண்ட் திரு பி தவரத்தினம் கொழும்பு யார்ட் உயர் அதிகாரி திரு கே கனகநாதன் திரு ந கமலேந்திரன் ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் வழக்கை சுப்ரீம்கோர்ட்டிற்குப்பாரப்படுத்தியுள்ளார்.

இவ்வழக்கு முன்பு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு சின்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப் பட்டிருந்தது அட்டோர்னிஜெனரல் திரும்பவும் சிலசாட்சிகளை மாஜிஸ்திரேட்கோர்ட்டில்விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இவ் வழக்கு மீண்டும் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டது.

### அகதிகளுக்கு சாரங்கள் அன்பளிப்பு

கோட்டை புதன்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றுள்ளவர்களுக்கு உதவும்பொருட்டு இலங்கை அரசாங்கம் 20 லட்சம் ரூபா பெறுமதியான சாரங்களை விநியோகிக்க உள்ளதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# உலக வலம்

### சொர்க்கமும் நரகமாகலாம்

நந்தி

கஷ்டங்களும் பிரச்னைகளும் தாக்கினால் சொர்க்கமும் நரகமாக மாறலாம். தென்பசுபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகள் பூலோக சொர்க்கம் என அங்கு செல்பவர்களாலும், வசிப்பவர்களாலும் வர்ணிக்கப்படுபவை.

ஆனால் தற்போது இத்தீவுகளின் சமூக பொருளாதார நிலையில் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன. காரணம் பெருகிக்கொண்டேவரும் ஜனத்தொகைதான். ஜனத்தொகை பெருக ஏனைய நாடுகளில் இருந்து தனித்தும் தமக்கே உரிய வருவாயைக் கொண்டு செவ்வனே சிறப்பாகவும்திகழ்ந்த இத் தீவுகள் சமூக பொருளாதார பிரச்னைகளின் தாக்குதலைச் சமாளிக்க இயலாதுள்ளன. பிஜி, டொங்கா, சமோவா ஆகியன இத் தீவுகளிற் சில.

1918-ம் ஆண்டு 150,000 பேரைக் கொண்டிருந்த பிஜி தீவின் ஜனத்தொகை இன்று 500,000ஆக அதிகரித்துள்ளது.

0 0 0

### அயர்லாந்தில் இனவெறி

பெல்பாஸ்ட்

பெல்பாஸ்டில் அடிக்கடி நடைபெறும் இனக்கலவரத்தால் வேலையற்றிருப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. கத்தோலிக்கர் வேலைவாய்ப்புப் பெறுவதற்குப் பகீரதப் பிரயத்தனம்தான் செய்ய வேண்டும்.

உணவுச் செலவைக் குறைக்க நண்பகல் இரண்டு மணிவரை ஆண்கள் இங்கு தூங்குவதாக கூறப்படுகிறது. அந்த அளவுக்கு அயர்லாந்தில் வேலையில்லாப் பிரச்னை வளர்ச்சியடைந்துள்ளதாம்.

4,00000 பேரைக் கொண்ட பெல்பாஸ்ட் நகரத்தில் கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்தியர்களும் வேலையில்லாப் பிரச்னையால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

வட அயர்லாந்தில் 4,98,750 கத்தோலிக்கர்களும் 8,86 500 புரட்டஸ்தாந்தியர்களும் வாழ்கிறார்கள். வீடு, வேலையின்மை இவையிரண்டும் இம்மக்களின் தீராத பிரச்னைகள். பெல்பாஸ்ட் கப்பல்கட்டும் தொழிற்சாலையில் 1000 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 500 பேர் கத்தோலிக்கர்.

0 0 0

### வர்த்தக நுட்பம்

ரோக்கியோ

கிழக்கில் சகலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து நல்ல வளர்ச்சியடைந்துள்ள நாடாகத் திகழும் ஜப்பான் இவ் வளர்ச்சியை எவ்வாறு பெற்றது என்ற கேள்வி ஏனைய நாட்டவர் மத்தியில் எழுந்துள்ளது. ஜப்பானின் வர்த்தக நுட்பமே அதன் வளர்ச்சிக்குக் காரணமாகும்.

அமெரிக்கா சந்தையில் கவனம் செலுத்தும் அதேவேளையில் ஆசிய, லத்தீன், அமெரிக்கா ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் தனக்குக்கிடைக்கும் வர்த்தக வாய்ப்புகளையும் பயன்படுத்துகிறது. தங்கள் பொருட்கள் தேவைப்படும் நாடுகளுக்கு அவற்றை விரைவாக அனுப்பிவைத்துவிடுகிறார்கள். வர்த்தகத்தில் மேற்கொள்ளும் துரிதமான சேவையும், நுட்பத்திறனுமே ஜப்பானின் வளர்ச்சிக்குக் காரணமாகும்.

0 0 0

### ரிபர் நதி நாற்றமெடுக்கிறது

ரோம்

சமீபத்தில் ரிபர் நதி எவரும் செல்ல இயலாதவாறு நாற்றமெடுத்தது. காரணம் ரோமிலிருந்து மத்தியதரைக் கடற்பகுதிவரையுள்ள நீர் நிலைகளில் உள்ள மீன்கள் இறந்து இந் நதிக்குள் வந்து குவிந்தமையேயாகும்.

பெருமளவில் மீன்கள் இவ்வாறு இறந்தமைக்குக் காரணம் தொழிற்சாலைகளிலிருந்து பெருமளவில் கழிக்கப்பட்ட இரசாயனப் பொருட்களை ஆற்றுள் கொண்டுவந்து போட்டுவிடுவதே எனச் சிலர் கருதினர். ஆனால் இந்த கருத்து பிழையானதாகும். ரோமில் 30 லட்சம் மக்களில் 15 லட்சம் பேர் இந்த நதியையே குளிப்பது கழுவுதல் மற்றும் சகல வேலைகளுக்கும்பயன்படுத்துகிறார்கள். இதுவே மீன்கள் பெருந்தொகையாக இறந்தமைக்குக் காரணம் எனப் பின்னர் சுகாதார அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### சுவீப்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| 01T000788 | 14K000551 |
| 19Q000921 | 16R000076 |
| 15U000321 | 22Y000017 |
| 15D000750 | 17Q000283 |
| 04M000528 | 14[illegible]000846 |
| 08V000668 | 15A000527 |
| 24T000450 | 05M000460 |
| 05[illegible]000164 | 05W000183 |
| 05K000689 | 15[illegible]000019 |
| 17L000264 | 21Q000[illegible]82 |
| 03Y000512 | 20K000198 |
| 04S000481 | 02X000510 |
| 16Z000541 | 21M000723 |
| 23O000446 | 12J000414 |
| 18C000759 | 14H000694 |
| 16P000984 | 15[illegible]000790 |
| 04P000598 | 12K000609 |
| 17T000514 | |

இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டியவை

### விண்வெளி..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

#### மரணத்துக்குரிய காரணங்கள்

சோவியத் விண்வெளி வீரர்கள் மரணம் மர்மமாகவே இருந்த போதிலும் சோவியத் விஞ்ஞானிகள் சில காரணத்தை காட்டியுள்ளார்கள்.

அதிர்ச்சியினால் மரணம் சம்பவித்திருக்கலாம் அல்லது சுவாசிப்பதற்காகப் பொருத்தப்பட்டிருந்த குழாய் விலகியதால் மரணம் சம்பவித்திருக்கலாம் போன்ற சில ஹேஸ்யங்களை விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

### கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களில் இனிக் கலந்துகொள்வதில்லையென தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக் குழுவினர் செய்த முடிவு பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறுவதற்கெனப் பொதுக்கூட்டம் வைப்பதற்குத் தமிழரசுக்கட்சியினர் சார்பில் திரு எஸ். நடராசா அனுமதி கோரிய போது அரசியல் கூட்டங்கள் வைப்பதற்கு இது உகந்த நேரமல்ல என்று கூறி வடபகுதிப் பொலிஸ் அதிபர் அக்கோரிக்கையை நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.